[1978 மார்ச் 16

மாவட்ட அபிவிருத்திக் குழுக்களால் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள்.

*599 வினு—திரு. ஓ. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களில் நிறைவேற்றப் படும் தீர்மானங்கள், சிபாரிசுகள் எந்த அளவிற்கு அரசினுல் நிறைவேற்றப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தீர்மானங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. கவனமாகப் பரிசீலித்து இயன்றவரை அரசு மாவட்ட வளர்ச்சிக் குழுக்களின் சிபாரிசுகளை ஏற்று ஆணை பிறப்பிக்கின்றது. நிதி வசதி இல்லாத காரணத்திற்கோ அல்லது தவிர்க்க முடியாத மற்ற காரணங்களுக்குத்தான் அந்த சிபாரிசுகளை ஏற்க இயலாமல் போகலாம்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் அதிகாரிகளும் பொதுமக்களும் நீண்ட நேர ஆலோசனைக்கு பிறகுதான் ஒரு முடிவுக்கு வருகிறுர்கள். கலெக்டர் உட்பட எல்லோரும் சேர்ந்து ஏகோபித்த முடிவெடுத்து, அது பற்றி தீர்மானம் நிறைவேற்றப் படும்போது அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, நிதிநிலை இடம் தரவில்லை என்றுலும் விசேஷ ஏற்பாடு செய்து, அத்தீர்மானத்திற்கு செயல் வடிவம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, முக்கியத்துவம் கொடுப்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனுல் நிதி நிலையைப் பொறுத்துதான் பரிசிலனை செய்யப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவு உடனடியாக அமுல் நடத்தப்படாதது மட்டுமல்ல ; நேர் எதிரிடையான நடவடிக்கையும் கூட சில சமயங்களில் எடுக்கப்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றுல், இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், ஒரு ரூபாய் செஸ் இருந்ததையே குறைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனுல் 2½ ரூபாய் வசூல் செய்யும் நிலைமை ஏற்பட்டது. இம்மாதிரியான நிலைமைகள் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் வரும்வரையில் அதை நிறுத்தி வைக்கவும், அபிவிருத்திக் கவுன்சில் தீர்மானத்தை அப்படியே நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?.

1978 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இதுவும் நிதி பொறுப்புப் பற்றிய தீர்மானம். ஆகவே, இதில் சிக்கல் இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலுக்கு கலெக்டர் தலைவராக இருக்கிறார். வருகின்ற உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பிறகாவது அந்த வளர்ச்சிக் குழுவுக்கு ஒரு 'நான்-அபிசியல்' தலைவராக நியமிக்கப்படும் நிலையை உருவாக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கலெக்டருக்கே மாவட்ட ஆட்சித் தலைவர் என்றுதான பெயர் ஆகவே காரியங்கள் நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் கலெக்டர் குழுவுக்குத் தலைவராக இருக்கிறார்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நிதிவசதி இல்லாததால் மாவட்ட வளர்ச்சிக் குழுவில் நிறைவேற்றப்படும் தீர்மானத்திற்கு செயல்வடிவம் கொடுக்க முடியவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நிதிவசதி இல்லாதபோது எதற்காக குழுக் கூட்டம் நடக்க வேண்டும்? குழு அங்கத்தினர்களுக்கு ஒரு ரூபாய், 2 ரூபாய் டி.ஏ. வேறு கொடுக்கிறார்கள்: அதுவும் செலவுதான். ஆகவே, நிதிவசதி இல்லாதபோது டி.டி.சி கூட்டம் நடத்துவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: செயல்படுத்த முடியவில்லை என்பதல்ல; நிதிவசதியைப் பொறுத்து செயல்படுத்தப்படுகிறது நீண்டகால்மாக அப்படித்தான செய்யப்பட்டு வருகிறது

திரு சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் நடுவீரப்பட்டு சென்னப்ப நாயக்கன்பாளையம் இடையே ஓடும் ஓடை மீது பாலம் அமைப்பதற்கு 1967-ல் மாவட்ட வளர்ச்சிக் குழுவுக்கு நான் ஓர் தீர்மானம் கொண்டு சென்றேன். அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அதற்கு 3 இலட்சம் ரூபாய் சாங்ஷனும் செய்யப்பட்டது இதுவரை அது கட்டிமுடிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் பற்றியது கேள்வி நீங்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தைப்பற்றி, குறிப்பிட்ட ஒரு தீர்மானத்தைப்பற்றிக் கேட்டால் அதுபற்றி அமைச்சரிடம் பதில் இருக்காது தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. சி. கோவிந்தராசன்: ஏற்கனவே இவ்வாறு சாங்ஷன் செய்யப்பட்டப் பிறகு இதுவரை அது நிறைவேற்றப்படாததால் இவ்வாண்டு மீண்டும் அதுகுறித்துத் தீர்மானம் கொடுத்ததற்கு வேறு நிதியிலிருந்து சாங்ஷன் செய்யப்போவதாக ஒரு பதில்

வந்து இருக்கிறது. கவுன்சில் கூட்டத்தில் ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டு, 10 ஆண்டுகளாகியும் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாவட்ட வளர்ச்சிக் குழு தீர்மானத்தைக் கரூராக நடைமுறைக்குக் கொண்டுவர துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தீர்மானத்தைப் பொறுத்தவரையில், எங்கே தடங்கல் ஏற்பட்டது என்று விவரம் இல்லை. மீண்டும் அரசுக்கு வருமானால் பரிசீலிக்கலாம்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, ஒரு கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை அரசு ஏற்றுக்கொண்டதா, இல்லையா, என்ற விவரம் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படுமா? அதோடு பல துறைகளைச் சேர்ந்த தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அகவே, சில முக்கியமான பிரச்னைகளில் சிக்கல் வருமானால் அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அடுத்த கூட்டத்திற்கு வந்து, விவாதித்து சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஒரு மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அரசின் பரிசிலனையில் இருக்கிறதா அல்லது அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா? பதில் வந்திருந்தால் என்ன பதில் என்பதுபற்றி அடுத்த குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது. குழுவில் அதுபற்றி விவாதித்து, மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கையைப்பற்றித் தீர்மானிக்கப்படுகிறது.

கள்ளக்குறிச்சியில் குடிசைவாழ் மக்களுக்குக் கிணற்றுநீர்

*600 வினா—திரு. துரைமுத்துசாமி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி அருகில் உள்ள கோமுகி நதியில் பேரூராட்சியில் வெட்டப்பட்ட கிணற்றில் ''எச்சரிக்கை — சேரிமக்கள் அனைவரும் தொட்டியில் தண்ணீர் எடுக்கக்கூடாது, மீறினால் அபராதம் விதிக்கப்படும்'' என்று தனியார் விளம்பரப் படுத்தியது குறித்து கள்ளக்குறிச்சி போலீசில் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் என்றால், இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?